**+2 வணிகவியல் 2ம் திருப்பத் தேர்வு பிப் - 25**
**சரியான விடை**

1. (இ) வேலைப்பகிர்வு
2. (இ) திட்டமிடுதல்
3. (இ) நீண்டகால நிதி
4. (ஆ) 1992
5. (ஈ) மேற்கூறிய அனைத்தும்
6. (இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்
7. (அ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள்
8. (ஆ) கண்ணுக்கு புலனாகா
9. (ஆ) புறவளங்கள்
10. (ஆ)பணியமர்த்தல்
11. (ஆ) தொழிற் சாலைக்கு வெளியில்
12. (ஆ) பரிவர்த்தனை
13. (ஆ) நடவடிக்கை
14. (ஈ) பணியமர்த்தல்
15. (இ) 4
16. (இ) உலகமயமாக்கல்
17. (அ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி
18. (அ) i ii iii iv v vi
19. (அ) அனைத்து கூற்றும் சரி
20. (ஈ) வாக்கு சீட்டு முறை

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மை:** முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது – ஹென்றி.ஃ.போயல்

22. **நுண்ணறிவு பரிசோதனை:** நுண்ணறிவு திறன் சோதனை என்பது ஒரு வகை உளவியியல் ரீதியிலான சோதனை ஆகும். இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்க பயன்படும்.

23. **விதிவிலக்கு மேலாண்மையின் பொருள்:** விதிவிலக்கு மேலாண்மை என்பது நெறிமுறையிலிருந்து விலகிப் போகும் நிகழ்வுகளை அடையாளம் காண்பதற்கும், கையாளவதற்கும் கவனம் செலுத்துகின்ற வணிக நிர்வாகத்தின் ஒரு பணியாகும்.

24. **சமூகச் சந்தையிடுகை:** சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில் சமூகத்தில் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில் பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை சமூக சந்தைப்படுத்தல் எனப்படும்.

25. **ஜான். F.கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள்** பாதுகாப்பில் உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கேட்கும் உரிமை

26. **அரசுப் பத்திரங்கள் சந்தை:** அரசு அல்லது தங்கமுனை பத்திரங்கள் வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு அரசுபத்திரங்கள் என்று பெயர்.

27. **வாங்குபவர் ஜாக்கிரதை:** :வாங்கிய பொருள் பலனளிக்காவிடில் விற்றவர் பொறுப்பாக மாட்டார். வாங்கியவர் நிவாரணம் கோர முடியாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். என்ற தத்துவமே வாங்குபவர் ஜாக்கிரதை கோட்பாடாகும்

28. **ஒழுங்குமுறை சந்தை:** அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படும் சந்தை அரசால் கட்டுப்படுத்தப் படும் சந்தை ஒழுங்குமுறை சந்தை ஆகும்.

29. **மனித வள மேலாண்மை:** மனிதவள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல், மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியைச் செய்வதாகும்.

**30.** ICICI ன் துணிகர மூலதனம் IDBI ன் துணிகர நிதி, SIDBI ன் தொழில்நுட்பவளர்ச்சி, இந்திய கட்டமைப்பு நிறுவனம் ( TDICT)

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?**
அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல
இணக்கம். சச்சரவின்மை
தனிமனிதத் தத்துவம் அல்ல ஒத்துழைப்பு
ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமுள்ள வளர்ச்சி

**32. மூலதனச் சந்தையின் ஏதேனும் இரு பணிகள்**
**சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்:-** பொது மக்களிடமிருந்து சேமிப்பை திரட்டுகிறது. அதை மூலதனமாக மாற்றி தருகிறது.
**தொழில் துறை வளர்ச்சி:-** பொது மக்களிடம் திரட்டப்பட்ட சேமிப்பை முதலீடாக மாற்றி தொழில் துறையில் முதலீடு செய்கிறது. இதனால் தொழில் துறை வளர்ச்சி பெறுகிறது.

**33. கருவூல இரசீதின் பொது இயல்புகள்** வெளியிடுபவர், நிதி இரசீது, நீர்மைத் தன்மை, முக்கிய ஆதாரம், பண மேலாண்மை

**34. காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.
**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**35. சமூக சந்தையிடுதலின் நோக்கங்கள்:** சமூக நலனை பாதுகாப்பதாகும். புகையிலை மது பொருட்களை பயன்படுத்துதல் சுற்றுப்புறம் மாசுபடுத்துதல் வரதட்சனை பெண் குழந்தை பாதுகாப்பு சாலை பாதுகாப்பு மற்றும் நெகிழிப்

பைகள் உபயோகம் போன்றவற்றிற்கு எதிர்க்கும் நோக்கத்திலும் சமூகம் விரும்பத்தக்க மற்றும் உடல் நலனை பாதுகாக்கும் பொருள்களை சந்தையிடுவதை சமூக சந்தைப்படுத்தல் குறிக்கும் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் அல்லது பாதிக்கும் காரணிகளை நீக்கி தரமான வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் சந்தைப்படுத்துதலில் முக்கிய நோக்கம் ஆகும

**36. சட்டமுறைக் கூட்டம்:** ஒரு பொது நிறுமம் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் கூட்டப்படும் பங்குதாரர்களின் **முதல் கூட்டம்** ஆகும்.

**37. புதிய பொருளாதாரக் கொள்கை:** உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்தின் நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது. அவை. தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல். இவை டீபு என அழைக்கப்படுகிறது

**38. விற்பனை உடன்பாடு:** உரிமையை எதிர்காலத்தில் மாற்றும் நடவடிக்கைகளுக்கு விற்பனை உடன்பாட்டு நடவடிக்கை எனப்படும்.

**39. எழுந்திரு இந்தியா:** தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது, போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதாகும். இது 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது. நிதிகளின் நிதியின் மூலம் நிதி வசதி அளிக்கிறது.

**40.** பல்வகை பொருள்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்ட சந்தையின் பெயர் **முறையற்ற சந்தை**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. மேலாண்மையின் பல்வேறு பணிகளைக் விளக்குக.**

**திட்டமிடல்:** முன் கூட்டியே முடிவெடுத்தல். வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.

**ஒழுங்கமைத்தல்:**உறுப்பினர்களிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துதல்.பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல் மற்றும் பொறுப்பு ஏற்றல்.

**பணி அமர்த்துதல்:**பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல். பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீட்டு ஊக்கம் அளித்தல். (பணப்பலன், பதவி உயர்வு)

**இயக்குவித்தல்** இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல்.கூட்டம், கையேடுகளை, சுற்றறிக்கை போன்றவை மூலம் தகவல்களை அளித்தல்.

**ஒருங்கிணைத்தல்:** பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல்.அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

| **41.ஆ. அடிப்படை** | **முதல்நிலைச் சந்தை** | **இரண்டாம் நிலைச் சந்தை** |
|---|---|---|
| பொருள் | புதிய பங்குகளுக்கான சந்தை | முன்னரே வெளியிட்ட பங்குகளுக்கான சந்தை |
| கொள்முதல் | நேரடி | மறைமுகம் |
| விற்கும் முறை | ஒரு முறை | பல முறை |
| ஆதாயம் பெறுபவர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| விலை | நிலையான விலை | தேவை அளிப்பை பொறுத்து மாறும் |

**42.அ. பணிசார் தொழில் முனைவோரின் தன்மைகள்**

**புதுமை படைக்கும் தொழில் முனைவோர்:** புதுமை புகுத்திக் கொண்டே இருப்பவர். புதிய தொழில் நுட்பம் மூலம் உற்பத்தியை பெருக்குவது,

**மாதிரியை பின்பற்றும் தொழில்முனைவோர்:** சந்தையில் கிடைக்கும் பொருட்களை வேறுமுறையில் வடிவமைப்பவர்கள்.

**காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர்:** இவர்கள் புதுமை புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள். தொழிலை மூட வேண்டிய சூழ்நிலை வந்தால் மட்டுமே மாற்றத்தை பின்பற்றுவார்கள்.

**மந்தமான தொழில் முனைவோர்:-** இவர்கள் தொழிலில் மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள்.

**42.ஆ. நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?**

விற்பனை ஒப்பந்தப்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

விலை செலுத்தியவுடன் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்வது நுகர்வோரின் பொறுப்பாகும்.

குறித்த நேரத்தில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கே அவரே பொறுப்பாகும்.

நுகர்வோர் வாங்கியப் பொருட்களை அதன் விதிமுறை செயல்முறைக்கேற்ப முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது விற்பனையாளரிடமிருந்து ரொக்க இரசீது பெற வேண்டும்.

**43.அ. பங்குச் சந்தை பணிகளை விவரி.**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட

பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.

**43.ஆ. செபியின் பணிகளை விவரி**

போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்கிறது.

பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.

நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல். மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

| 44.அ **மனித வளம்** | **மனித வள மேலண்மை** |
|---|---|
| எவர் ஒருவர் திறமை, தனித்திறன், அறிவு, தகுதிகள் பெற்றிருக்கிறாரோ அவரே மனித வளம் | மனித வளத்தினை நிர்வகிப்பது மனித வள மேலாண்மை |
| மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை | மனித வள மேலாண்மை உணர்சிகளை கட்டுபடுத்தி நோக்கத்தை எல்லையாக கொண்டவை |
| மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது | இதன் மூலம் மனித நடத்தைகளை கண்டறிய முடியும் |
| இது நகரும் தன்மையுடைது | இது நிறுவனத்தோடு தொடர்புடையது |
| இது உற்பத்தி செய்யும் ஒரு காரணி | இது ஒரு திறன்மிகு மேலாண்மை |

**45.அ. இயக்குனர் தகுதிகள் பற்றி கூறுக?**

நிறுமத்திற்கு பொருத்தமான திறன், அனுபவம் மற்றும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

சரியான மனநிலை உடையவராக இருக்க வேண்டும்.

நிறுமத்தின் தகுதி பங்குகள் வைத்திருக்க வேண்டும்.

ஒரு இயக்குனர் தனிநபராக இருத்தல் வேண்டும்.

நல்ல நிதிநிலை உடையவராக இருத்தல் வேண்டும்.

நீதிமன்றத்தால் குற்றவாளி என தண்டிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

45.ஆ. **நிறுமச் செயலரின் பணிகளை விளக்குக?**

**சட்டப் பூர்வமான பணிகள்:-**ஆவணங்களில் நிறுமத்தின் சார்பாக கையொப்பம் இடுவது.பங்கு முதல் தொகையை அதிகரிப்பது குறித்த அறிவிப்பை நிறும பதிவாளரிடம் கொடுத்தல்.ஆண்டு அறிக்கையில் கையொப்பம் இட்டு அனுப்புதல்.சட்ட முறை ஏடுகளை தயாரித்தல்.ஒவ்வொரு பங்குதாரர்களுக்கும் ஆண்டு பொதுக்கூட்டம் குறித்த அறிவிப்பை அனுப்புதல்.

**சட்டப் பூர்வமற்ற பிற பணிகள்:**இயக்குநருக்கு ஆற்ற வேண்டிய முகமைப் பணிகள்.பங்குநருக்கு ஆற்ற வேண்டிய முகமைப் பணிகள்.ஊழியர்களுக்கு ஆற்ற வேண்டிய முகமைப் பணிகள்.

46.அ. **சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது:**

**குடும்பச் சந்தை:** குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பொருட்களை பரிமாற்றம் செய்வது.

**உள்ளூர் சந்தை:**ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக வாங்குவோரும் விற்போரும் உள்ளூரிலேயே பங்கேற்பது,

**நீண்ட கால சந்தை:** நீடித்து உழைக்க கூடிய பொருட்களை கையாளும் சந்தையாகும்.

**மிககுறுகியசந்தை:** மிகக்குறுகியகாலத்தில் பயன்படுத்தக் கூடிய பொருட்கள் மட்டும் கையாளும் சந்தை.

**மொத்த விற்பனை சந்தை:** உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வது.

| 44.ஆ.**அடிப்படை** | **ஆட்சேர்ப்பு** | **தேர்ந்தெடுத்தல்** |
|---|---|---|
| அணுகுமுறை | நேர்மறையான ஓர் செயல்முறை | எதிர்மறையான ஓர் அணுகுமுறை |
| வரிசை | முதல் படி | இரண்டாம் படி |
| முறை | சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| செயல்முறை | மிகவும் எளிதானது | மிகவும் சிரமம் சிக்கலானது |
| காலம் | குறைவான காலம் போதுமானது | அதிக காலம் தேவைப்படும் |

46.ஆ. **நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன் நோக்கங்கள் யாவை?**

நுகர்வோரின் உயிருக்கும் உடமைக்கும் ஊறுவிளைவிக்கும் பொருட்களை தடுத்தல்.

நுகர்வோர்களுக்கு பொருட்களின் உண்மையான தகவல்களை அளித்தல்.

நியாமற்ற வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.

நுகர்வோரின் உரிமைகள் கடமைகளை அறியச் செய்தல்.

நல்ல தரமான பொருட்களை சரியான விலைகளில் கிடைக்கச் செய்தல்.

**47.அ. சரக்கு விற்பனை சட்டத்தில் சரக்கினை வகைப்படுத்திக் காட்டுக.**

**இருக்கின்ற சரக்கு:-** ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு. இவை மூன்று வகைப்படும்.

**ஓப்பிய சரக்கு:-** பல சரக்குகளில் இந்த சரக்கு தான் வாங்க தேர்வு செய்கிறேன் என அடையாளம் காட்டப்பட்ட சரக்கு.

**உறுதிசெய்யப்பட்ட சரக்கு:-** விற்பனைஒப்பந்தம் செய்யப்பட்ட பின்பு இதுதான் என்ற உணரப்பட்ட சரக்கு.

**உறுதியிடா சரக்கு:-** ஒப்பந்தம் செய்யும் முன்பு இவை தான் என இனம் காணப்படாத சரக்கு.

**எதிர்காலசரக்கு:-** ஒப்பந்தம் செய்யும்போது தன்வசம் இல்லாதஆனால் எதிர்காலத்தில் தரப்படும் சரக்கு.

**வருநிகழ்வுசார்சரக்கு:-**இந்த சரக்குவிற்பனை எதிர்காலத்தில் நடக்கஇருக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**47.ஆ.** அய்யனார் வாங்கிய சலவை இயந்திரம் ஐந்து வருடம் உத்தரவாதம் முடியும் முன்னரே பழுதடைந்து விட்டது . சலவை இயந்திரம் வாங்கிய நிறுவனத்திடம் புகார் அளித்தும் அந்த நிறுவனம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் அவர் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் தெரிவிக்கலாம் பாதிக்கப்பட்ட நபரால் மட்டுமே புகார் அளிக்கப்பட வேண்டும் என்று அவசியமில்லை. அவர் சார்பாக மற்றவர்களுக்கு புகார் கொடுக்க உரிமைஉண்டு.மாவட்ட நீதிமன்றத்தை அணுகினால் அதற்க்கான தீர்வு கிடைக்கும் .

புகார் மனுவில் தரப்படவேண் டிய விவரங்கள்:

புகார் அளிப்ப வரின் பெயர் முகவரி

1. புகார் அளிக் கும் எதிர்தரப் பினரின் பெயர் முகவரி

2. வாங் கிய பொருள் அல்ல து பயன்ப டுத்திய சே வையின் நாள்

3. வாங் கிய பொருள் அல்ல து சே வையின் மதிப் பு

4. வாஙகிய பொருள் அல்ல து சே வையின் முழுவிவரம்

5. புகார் பற்றிய விவரம் அதாவது வணிக பழக்கங்களுக்கு புறம்பான செயல்பாடுகளால் அல்லது பொருள் அல்லது சேவையில் உள்ள பழுதா அல்லது மிகையாக செலுத்தப்பட்ட விலையா என தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

6. வாங்கிய பொருள் அல்லது சேவை தொடர்பாக வழங்கப்பட்ட ரொக்கம் அல்லது கட ன் இரசீது.

.
.